Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, OCTOBER 27, 2023

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 27, 2023 | ஒளி: 09 கதிர்: 115 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE



## நெல் திருடிய நால்வர் நீக்கம்

நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகளில் இருந்த நெல் தொகை திருடப்பட்டமை தொடர்பில் 04 களஞ்சியசாலை காப்பாளர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

உலகின் பெரும்பாலான நாடுகள்

# “எம்மீது கோபம்”

தற்போதைய அரசாங்கத்தின் இராஜதந்திர முன்னெடுப்புகள் பலவீனமானது என்றும், ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை பிரதிநிதிகள் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, ஒவ்வொரு நாட்டிற்கும் பொருந்தாத கதைகளையும் பொய்களையும் கூறுவதால் பெரும்பாலான நாடுகள் எம்மீது கோபமடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் உண்மையிலையே கோபம் என்றால்,வரவு -செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களித்துக் காட்டுமாறு நாமலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சவால் விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை பாதுகாத்துக் கொள்ள ஒருவரையொருவர் பொய் சொல்வதால் கட்சி பூஜ்ஜிய நிலைக்குச் சென்று படுதோல்வியடைந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியை நிர்வகிக்கும் விதத்தில் நாட்டின் வெளியுறவுக் கொள்கையை நிர்வகிக்க முடியாது என்றும் உலகம் பூராகவும் சென்று ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்களை உலகிற்கு எடுத்துரைப்பதன் மூலம் வெற்றிகரமான வெளிநாட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



உலக பொருளாதாரத்துடன் முன்னோக்கிச் செல்


# “டிஜிட்டல் மாற்றம்”

உலகின் போட்டிப் பொருளாதாரத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கு இலங்கையைத் தயார்படுத்தும் வகையில் டிஜிட்டல் பொருளாதார மாற்றம் துரிதப்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

இது தொடர்பான திட்டத்தை எதிர்வரும் வரவு -செலவுத் திட்ட உரையில் நாட்டிற்கு முன்வைப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான சட்டங்களைக் கொண்டு வர எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## ‘341’ க்கும் ஒன்லைன் முறை அறிமுகமாகும்

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டணம் செலுத்தும் நடவடிக்கை ஒன்லைன் முறையில் அடுத்த வருடம் முதல் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## NIC க்கான கட்டணம் எகிறியது

தேசிய அடையாள அட்டை (NIC) கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதிக்கான கட்டணம் 1,000 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேசிய அடையாள அட்டைகளின் உண்மைத் தன்மையைச் சரிபார்ப்பதற்கான கட்டணம் இணைய முறையில் சமர்ப்பித்தால் 25 ரூபாயாகவும், பௌதீக ஆவணங்கள் மூலமாகவோ அல்லது




ஆணையாளர் நாயகத்துக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய மின்னணு முறை மூலமாகவோ சமர்ப்பிக்கப்பட்டால் 500 ரூபாயாகவும் இருக்கும்.

தொடர்ச்சி P2

## வீதி விபத்துகளில் 115 சிறுவர்கள் பலி

இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் ஒக்டோபர் 15ஆம் திகதி வரையில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில், 115 சிறுவர்கள் இறந்துள்ளனர் என போக்குவரத்துப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ‘பெல்’ அடித்தால் மது

■ பு.கஜிந்தன்

வீடொன்றில் சட்டவிரோத மதுபானசாலை இயங்கி வருவதாகவும் குறித்த சட்டவிரோதமான மதுபானசாலை தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## முகாம்களில் “நாடற்றவர்களாக” இருப்போருக்கு இந்தியக் குடியுரிமை

■ பு.கஜிந்தன்

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு சென்று, அங்கு அகதிகள் முகாம்களில் “நாடற்றவர்களாக” இருக்கும் ஆயிரக் கணக்கானவர்களுக்கு, தமிழக அரசின் உயர்நிலைக் குழுவின் பரிந்துரையை இந்திய மத்திய அரசு சாதகமாகப் பரிசீலித்தால், இந்திய குடியுரிமை கிடைக்க வாய்ப்புகள் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு அரசு அமைத்த உயர்மட்ட குழுவின் பரிந்துரை, கோயமுத்தூரில் ‘மலையகம் 200’ என்ற தொனிப்பொருளில் ஞாயிற்றுக்கிழமை (22) இடம்பெற்ற சர்வதேச மாநாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தின் முன்னணி தொழில் நகரமான கோயமுத்தூரில் அந்த மாநாட்டின்போது, அந்த உயர்மட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினரான பேராசிரியர். இரா.இளம்பரிதி இதை ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## “அரிசி விலையைக் கூட்டி விற்றால் இறக்குமதி”

நாட்டில் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட மிக அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுவது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், அவ்வாறு அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களை கண்டறியும் வகையில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை உப குழு கூட்டத்தின் போது இது தொடர்பில் ஆராயப்பட்டதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2




## போதைவஸ்தால் ஆண் மரணம்

■ பு.கஜிந்தன்

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுவில் பகுதியில் அதிக போதைவஸ்து பாவனையால் ஆணொருவர் உயிரிழந்துள்ளார். உடுவில் பகுதியைச் சேர்ந்த விஜயராசா நிரஞ்சன் (வயது 34) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபரின் சகோதரர்கள் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் இவர், தனது தாயாருடன் உடுவில் பகுதியில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் அவர், வியாழக்கிழமை (26) காலை கழிப்பறைக்கு சென்று



விட்டு நீண்ட நேரம் திரும்பி வரவில்லை. இந்நிலையில் தாயார் கதவை திறக்க முற்பட்டபோது அது திறபடவில்லை. இந்நிலையில் தாயார் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தவேளை அவர் இறந்த நிலையில் காணப்பட்டார்.


தொடர்ச்சி P2

அமெரிக்காவின் மெய்ன் நகரில்

## 3 இடங்களில் துப்பாக்கிச் சூடு: 22 பேர் பலி; 60 பேர் காயம்

அமெரிக்காவின் மெய்ன் நகரில் லூயிஸ்டன் எனும் பகுதியில் 3 வெவ்வேறு இடங்களில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 22 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 60-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அமெரிக்க நேரப்படி புதன்கிழமை (25) பின்னிரவில் இச்சம்பவம் நடந்துள்ளது.

தொடர்ச்சி P2



இஸ்ரேல் தாக்குதல்

## செய்தியாளரின் மனைவி, குழந்தைகள் உட்பட 4 பேர் பலி

அல் ஜசீரா ஊடகத்தின் காசா பிரிவு செய்தியாளர் வல் அல் ததோவின் குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த அக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் மிகத் தீவிரமான பதிலடியைக் கொடுத்து வருகிறது. காசா நகரமே ஸ்தம்பித்து எங்கும் மரணம் ஓலங்கள் ஒலிக்கின்றன.

இந்நிலையில், கத்தாரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் அல் ஜசீரா ஊடகத்தின் காசா பிரிவு தலைவர் வல் அல் ததோவின் மனைவி, மகன்கள், மகள் என 4 பேர் இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



# “எம்மீது கோபம்”

பிரபஞ்சம் திட்டத்தின் கீழ்,39 ஆவது கட்டமாக அத்தனகல்ல உந்துகொட அறபா கல்லூரிக்கு ஸ்மார்ட் வகுப்பறைகளுக்கான உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு வியாழக்கிழமை (26) நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீனக் கப்பல் தொடர்பில் கூட தற்போதைய அரசாங்கம் பல்வேறு கதைகளை கூறியுள்ளது. வர விட மாட்டோம் என இந்தியாவிடம் கூறி மறுபக்கம் வாருங்கள் என சீனாவிடம் கூறியுள்ளனர் என்றும், நொடிக்கு நொடி மாறி மாறி கதைப்பதால் நாட்டுக்கு முக்கியமான பல சர்வதேச நாடுகள் நம் மீது கோபம் கொண்டுள்ளன என்றும், இவ்வாறான அரசாங்கத்தையோ அல்லது வெளிநாட்டுக் கொள்கையையோ நடைமுறைப்படுத்த முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு பொய் சொன்னது போல் சர்வதேச சமூகத்திடம் பொய் சொல்ல முடியாது என்றும்,சீன கப்பல் விவகாரத்தை முழுவதுமாக குழப்பியதற்காக பல நாடுகள் நம் மீது கோபத்தில் உள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியால் முடியாது போனாலும், ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிகரமான வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்டுள்ளது என்றும்,கோள் சொல்லித் திரியும் அரசியல் மூலம் இந்த வெளியுறவுக் கொள்கையை திறம்பட நடைமுறைப்படுத்த முடியாது என்றும்,எமது நாட்டில் ஆட்சியிலுள்ள பலவீனமான அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக எமது நாட்டு மக்கள் மீதும்,நாட்டு மக்கள் மீதும் கோபம் கொள்ள வேண்டாம் என சர்வதேசத்திடம் கோரிக்கை விடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# ‘341’ க்கும் ஒன்லைன் முறை அறிமுகமாகும்

பல உள்ளூராட்சி மன்றங்கள் இது தொடர்பான வேலைத்திட்டத்தை ஏற்கெனவே ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் வரி அறவீடு நடவடிக்கைகள் உள்ளிட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்வதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

நாடளாவிய ரீதியில் இயங்கும் 341 உள்ளூராட்சி நிறுவனங்களிலும் உரிய வேலைத்திட்டம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான அனைத்து வீதிகளையும் இவ்வருட இறுதிக்குள் வரைபடமாக்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

# NIC க்கான கட்டணம் எகிறியது

மேலும், பதிவுச் சான்றிதழைப் புதுப்பிப்பதற்கான 10,000 ரூபாயில் இருந்து 15,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக் கட்டணமான 2,000 ரூபாயை 3,000 ரூபாயாக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த திருத்தங்கள் பதிவு செயல்முறையை எளிதாக்குவதையும் பொதுமக்களுக்கான அணுகலை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

# முகாம்களில் “நாடற்றவர்களாக” இருப்போருக்கு இந்தியக் குடியுரிமை



“இலங்கை தமிழர்களின் நலன்கள் தொடர்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் உயர்மட்டக் குழு தனது இடைக்கால அறிக்கையில் தமிழக முகாம்களில் நாடற்றவர்களாக உள்ளவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கு பரிந்துரை செய்துள்ளது”.

அந்த இடைக்கால அறிக்கையானது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முகாம்களிற்கும் விஜயம் செய்து, தங்கியுள்ளோரிடம் பேசி, தரவுகளைப் பெற்று அதை ஆய்வு செய்து ஒருங்கிணைத்த பின்னரே தயாரிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்திலுள்ள முகாம்கள் மற்றும் அதற்கு வெளியில் மிக நீண்டகாலமாக வாழ்ந்துவரும் இலங்கை தமிழர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கு குறுகியகால மற்றும் நீண்டகால அடிப்படையில் சாத்தியப்படக்கூடிய தீர்வுகளை கண்டறிவதற்காக அரசால் இந்த குழு அமைக்கப்பட்டது.

முன்னதாக இந்த பன்னாட்டு மாநாட்டை ஆரம்பித்து வைத்து, உரையாற்றிய, தமிழ்நாட்டை ஆளும் திராவிட முன்னேற்ற கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, தமிழ்நாட்டின் பல்வேறு அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளவர்கள் குறித்து இந்திய மத்திய அரசு பாராமுகமாகவே உள்ளது என விமர்சித்தார்.


“தமிழ்நாட்டிலுள்ள முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் குறித்து டெல்லிக்கு மிகக் குறைந்தளவிற்கே புரிதல் உள்ளது” என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்திய பாராளுமன்றத்தில் வட சென்னை தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் வைத்தியர் கலாநிதி வீராசாமி, தமிழக முதலமைச்சர் இந்த உயர்மட்ட குழுவின் அறிக்கையை ஆராய்ந்து கொண்டிருப்பதாகவும், முகாம்களில் உள்ளவர்களை பொருளாதார ரீதியில் உயர்த்துவதில் அவர் முனைப்பாக இருப்பதாகவும் வலியுறுத்தினார்.

இந்தியாவில் உள்ளவர்களுக்கு குடியுரிமை வழங்குவது மத்திய அரசின் ஆளுமைக்கு உட்பட்ட விடயமாகும். அது தொடர்பிலான அனைத்து தீர்மானங்னகளை டில்லியே எடுக்க முடியும். மாநில அரசுகளிடமிருந்து வரும் ஆலோசனைகள் பரிந்துரைகளாக மாத்திரமே இருக்க முடியும். எனினும், அண்மையில் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் ஜி.ஆர். சுவாமிநாதன் அளித்த தீர்ப்பின் அடிப்படையில், அகதி முகாமிலிருந்து பெண் ஒருவருக்கு குடியுரிமை வழங்கப்பட்டு, பின்னர் அவர் இந்தியக் கடவுச்சீட்டும் பெற்றார் என்பது கவனிக்கத்தக்கது. அந்த தீர்ப்பும், அதையொட்டிய நடவடிக்கையும், மற்றவர்களுக்கும் அதே போன்று வழிவகுக்கும் என்று அந்த உயர்மட்டக் குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# 3 இடங்களில் துப்பாக்கிச் சூடு: 22 பேர் பலி; 60 பேர் காயம்

ஒரே நேரத்தில் மெய்ன் நகரின் உணவகம், வால்மார்ட் விநியோக மையம், மதுபான விடுதி எனப் பல இடங்களில் துப்பாக்கிச் சூடு நடந்ததையடுத்து, பொலிஸார் பொதுமக்கள் வெளியில் வர வேண்டாம் என்று கோரிக்கை விடுத்தனர்.

துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக ஆட்ரோஸ்கோகின் நகர காவல்துறை சந்தேக நபரின் 2 புகைப்படங்களை வெளியிட்டது. அதில் அந்த மர்ம நபரின் கையில் ரைஃபில் துப்பாக்கியுடன் இருப்பது பதிவாகியிருந்தது. அந்தப் புகைப்படங்களைப் பொதுவெளியில் பகிர்ந்த நகர ஷெரீஃப், படத்தில் இருப்பவர் தொடர்பான தகவல் தெரிந்தால் பகிரும்படி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.



இந்நிலையில் துப்பாக்கியுடன் இருந்த நபரின் பெயர் ராபர்ட் கார்டு என்பது தெரியவந்துள்ளது. 40 வயது மதிக்கத்தக்க அந்த நபரை தேடப்படும் பயங்கர ஆபத்தான நபராக பொலிஸ் அறிவித்துள்ளது. அந்த நபர் இன்னும் காவல்துறையில் சிக்காத காரணத்தால் மெய்ன் நகரம் உச்சபட்ச பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்கள் அனைவரும் மத்திய மெய்ன் மருத்துவ மையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# “டிஜிட்டல் மாற்றம்”

கொழும்பு மொனார்க் இம்பீரியல் ஹோட்டலில் புதன்கிழமை (25) பிற்பகல் இடம்பெற்ற “தேசிய தகவல் தொழில்நுட்ப விருது வழங்கும் விழா -NBQSA 2023” நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

உள்நாட்டைச் சேர்ந்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் சிறந்த தகவல் தொழில்நுட்பத் தயாரிப்புகள் மற்றும் புத்தாக்கங்களுக்கு உயர் அங்கீகாரம் வழங்குவதற்காகவும், அவர்களின் தகவல் தொழில்நுட்பத் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான தளத்தை உருவாக்குவதற்காகவும், தகவல் தொழில்நுட்ப பட்டய நிறுவனமான பிரிட்டிஷ் கணினி சங்கத்தின் இலங்கைப் பிரிவினால் ஆண்டுதோறும் இந்த விருது விழா நடத்தப்படுகின்றது.

தகவல் தொழில்நுட்ப சேவைகள் துறையில் சிறந்து விளங்கிய பல தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விருதுகளையும் வழங்கி வைத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தொடர்ந்து உரையாற்றுகையில்...

‘’1980களின் தொடக்கத்தில் நான் கல்வி அமைச்சராக இருந்தபோது தகவல் தொழில்நுட்பம் பற்றி பேசினோம். அப்போது இலங்கையில் அதிகம் அறியப்படாவிட்டாலும், சின்க்ளெயார் நிறுவனத்தின் சின்க்ளெயார் அவர்களைச் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது.

பின்னர் நம் நாட்டு பாடசாலைகளுக்கு முதலாவது சின்க்ளெயார் கணினிகள் கொண்டு வரப்பட்டன. அதன்படி, தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிகளை மேம்படுத்துவதற்காக கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப கவுன்சில் தொடங்கப்பட்டது.

அந்த நேரத்தில்தான் பேராசிரியர் சமரநாயக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினி மத்திய நிலையத்தை ஆரம்பித்தார். அப்போது இந்தியா தகவல் தொழில்நுட்பத்தில் ஆர்வம் கொண்டிருந்தது. ஆனால் எங்களிடம் இல்லாத பிரச்சினைகள் அவர்களுக்கு இருந்தன. உதாரணமாக, கணினிகளை இறக்குமதி செய்ய எங்களிடம் போதுமான அந்நியச் செலாவணி இருந்தது. ஆனால் அதற்கான திறன் அவர்களிடம் இருக்கவில்லை.

இதற்கிடையில், கல்வித் துறையை மறுசீரமைக்க சீனா தயாராக இருந்தது. 1991 இல், கைத்தொழில், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சராக நான் இந்தியாவுக்கு விஜயம் செய்தேன். நான் பெங்களூர் சென்றிருந்தேன். அங்குதான் இந்தக் கைத்தொழில் தொடங்கியது. அவர்களிடம் இரண்டு பில்லியன் டொலர் பெறுமதியான ஏற்றுமதி இருந்தது.

இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்தை ஆரம்பிப்பது குறித்து நாங்கள் ஆராய்ந்தோம். அப்போது சீனாவும் தகவல் தொழில்நுட்பத் துறையில் கவனம் செலுத்தி வந்தது. துரதிர்ஷ்டவசமாக, அந்த வாய்ப்பை நாங்கள் தவறவிட்டோம். அந்த நாடுகள் முன்னோக்கி நகர்ந்தன. இதைத் தொடர்ந்திருந்தால், இன்று இருக்கும் பொருளாதார நெருக்கடியை நாம் சந்திக்க வேண்டியிருக்காது.

இருப்பினும், இப்போது வருத்தப்படுவதில் அர்த்தமில்லை. அவை நடந்து முடிந்துவிட்டன. இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டது போல், இதுவே எமக்கான கடைசி வாய்ப்பு. எனவே நாம் இப்போது தகவல் தொழில்நுட்பத்துடன் முன்னேற தயாராக வேண்டும். இல்லாவிட்டால் இந்த வாய்ப்பை என்றென்றும் இழக்க நேரிடும்.

ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல, நாட்டின் வர்த்தக நிலையை எமக்கு சாதகமாக அமைத்துக்கொள்வதோடு, ஏற்றுமதியிலும் தன்னிறைவாக இருக்க வேண்டும். மேலும் நம்மிடம் ஆடைத் தொழில் உள்ளது. நாம் தொடர்ச்சியாக தேயிலை மற்றும் ஆடைக் கைத்தொழில் துறை மீது தங்கியிருக்க முடியாது. புதிய பொருளாதார கட்டமைப்புத் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# வீதி விபத்துகளில் 115 சிறுவர்கள் பலி

சாரதிகளின் கவனக்குறைவாக வாகனம் செலுத்துவதே இந்த உயிரிழப்புகளுக்குக் காரணம் என கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்தார்.

“2022 ஆம் ஆண்டில் 2,539 வீதி விபத்துகள் இடம்பெற்றன. இந்த ஆண்டில் ஒக்டோபர் 15 வரை 1,790 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அவற்றில். 18 வயதுக்குட்பட்ட 115சிறுவர்கள் மரணமடைந்துள்ளனர்.

# “அரிசி விலையைக் கூட்டி விற்றால் இறக்குமதி”

மேலும், நிர்ணய விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை செய்யப்படும் பட்சத்தில், அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். தொடர்ந்தும் அமைச்சர் தெரிவிக்கையில்,

சம்பா உள்ளிட்ட பல அரிசி வகைகள் இவ்வாறு நிர்ணய விலைக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சம்பா அரிசி 230 ரூபாவுக்கும் நாட்டரிசி 220 ரூபாவுக்கும் கீரி சம்பா 260 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டுமென நிர்ணய விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களை கண்டறியும் வகையில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என குறிப்பிட்டுள்ளார்.

# செய்தியாளரின் மனைவி, குழந்தைகள் உள்பட 4 பேர் பலி

காசா மீதான தாக்குதல் தொடங்கியபின்னர் இடம்பெயர்ந்த ததோ குடும்பத்தினர் நுசைரத் அகதிகள் முகாமில் தங்கியிருந்தனர். அப்போது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 4 பேரும் இறந்துள்ளனர். கூடவே ததோவின் பேரனும் உயிரிழந்ததாகத் தெரிகிறது. நுசைரத் அகதிகள் முகாம் தாக்குதலில் இன்னும் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்ற முழு விவரம் வெளியாகிவில்லை.

விவரமறிந்து அல் அக்ஸா மருத்துவமனைக்கு வந்த ததோ தனது இறந்த மகனின் சடலத்தைக் கைகளில் ஏந்தி கதறும் புகைப்படம் வெளியாகியுள்ளது. மகனின் சடலத்தோடு மண்டியிட்டுக் கதறிய ததோ எங்களைப் பழிவாங்க எங்கள் குழந்தைகளைக் கொன்று குவிக்கின்றனர் என்றார். அப்போதும்கூட ததோ பிரெஸ் என்று எழுதப்பட்ட மேலாடையை அணிந்தபடிதான் இருந்தார். ததோவின் புகைப்படமும், வீடியோவும் வெளியாகியுள்ள நிலையில் அரபு நாடுகளில் இது மிகப்பெரிய அதிர்வலையை ஏற்படுத்தும் என்று தெரிகிறது.



# நெல் திருடிய நால்வர் நீக்கம்

நிக்கவெரட்டிய, மஹவ மற்றும் ஆனமடுவ ஆகிய பிரதேசங்களில் உள்ள நெல் களஞ்சியசாலைகளின் காப்பாளர்கள் நால்வரே சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட தெரிவித்தார்.

நெல் களஞ்சியசாலைகளில் இருந்து 700 இலட்சம் ரூபாய் பெறுமதியான நெல் கையிருப்பு காணாமல் போயுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் தெரிவித்தார்.

மொத்த கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், நெல் சந்தைப்படுத்தல் சபையினால் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘பெல்’ அடித்தால் மது

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் வியாழக்கிழமை (26) நடைபெற்றது. அதில் கலந்து கொண்டே அவர் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார்.

குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்து அங்கஜன் இராமநாதன், உடுப்பிட்டி மக்கள் வங்கிக்கு அருகில் உள்ள ஒரு வீடொன்றில் சட்டவிரோதமான மதுபானசாலை இயங்கி வருகிறது.

அந்த வீட்டுக்குச் செல்வோர் ‘பெல்’ அடித்து உள்ளே சென்று மதுபானத்தை கொள்வனவு செய்ய முடியும். எனவே, அதனை தடுத்துநிறுத்துமாறு கோரினார்.

குறித்த பிரிவுக்கான பொலிஸ் பொறுப்பாதிகாரியினை உடனடியாக குறித்த சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு குழுத்தலைவரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

# போதைவஸ்தால் ஆண் மரணம்

அவரது சடலம் மீது மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளின்படி அதிக போதைப்பொருள் பாவனை காரணமாக குறித்த மரணம் சம்பவித்துள்ளதாக தெரியவருகிறது.

அவரது வீட்டிலும் போதைப்பொருள் ஏற்றும் ஊசி உள்ளிட்ட பொருட்கள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஆணின் சடலம் மீட்பு

■ வ.சக்தி

மட்டக்களப்பு - களுவாஞ்சிகுடி பொறுகாமம் கிராமத்தில் ஆண் ஒருவரின் சடலம் புதன்கிழமை (25) இரவு மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர். போரதீவுப்பற்று பிரதேச செலயகத்திற்குட்பட்ட பொறுகாமம் சமூர்த்தி வங்கியில் கடமை புரியும் பெரியகல்லாற்றைச் சேர்ந்த நிலக்சன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் தொடர்பில் களுவாஞ்சிகுடி பொசலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# சதொச குறைத்தது



நான்கு வகையான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது. சம்பா அரிசி, கொண்டைக்கடலை, பருப்பு மற்றும் சிவப்பு அரிசி ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, ஒரு கிலோ கிராம் சம்பா அரிசியின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 222 ரூபாவாகும். ஒரு கிலோ கிராம் கடலையின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 549 ரூபாவாகும்.

மேலும், பருப்பு ஒரு கிலோ கிராமின் விலை 5 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 295 ரூபாவாகும்.

அத்துடன், சிவப்பு அரிசி ஒரு கிலோ கிராமின் விலை 3 ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 269 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# முன்னாள் இராணுவ தளபதி காலமானார்

இலங்கையின் 16ஆவது இராணுவத் தளபதி ஜெனரல் (ஓய்வு பெற்ற) லயனல் பலகல்ல காலமானார்.

இராணுவத் தளபதி ஜெனரல் இறக்கும்போது அவருக்கு வயது 75 என இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர், வியாழக்கிழமை (26) காலமானார். அவரது இறுதிச் சடங்குகள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.



# காட்டு யானை உயிரிழப்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா



அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இசங்காணிச்சீமை வயல் பிரதேசத்தில் கால்வாய்க்குள் வீழ்ந்து கடந்த மூன்று நாட்களாக உயிருக்கு போராடி வந்த காட்டு யானை வியாழக்கிழமை (26) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர் அருந்துவதற்காக கால்வாய்க்கு சென்றிருந்த யானை, விழுந்து காயமடைந்து நடக்க முடியாமல் இருந்தது. குறித்த யானைக்கு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சிகிச்சையளித்து வந்துள்ளனர். எனினும், யானை இறந்துவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த யானை கடந்த திங்கட்கிழமை (23) அதிகாலை வேளையில் கால்வாய்க்குள் வீழ்ந்ததாகவும், காலில் காயமேற்பட்டு நடக்க முடியாத நிலையில், சிலநாட்கள் நடமாடி வந்ததாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளம் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

■ மு.தமிழ்ச்செல்வன்

தபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாயவனூர் கிராமத்தின் வீதியில் இளம் குடும்பஸ்தரின் சடலம் வியாழக்கிழமை (25) மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான நவரத்தினராசா மதுஸன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் ஒரு குறிப்பிட்ட சடலம் பொது மக்களால் அடையாளம் காணப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளதுடன், சம்பவ இடத்திற்கு விரைந்த இராமநாதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலத்தின் வாய் மற்றும் காதில் இரத்தம் வெளியேறிய நிலையில்

காணப்படுவதால் அடித்து கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.



# குழந்தையை பணயம் வைத்து தாய் வன்புணர்வு

தனது குழந்தைக்குப் பாலூட்டிக்கொண்டிருந்த இளம் தாயை இளைஞர்கள் மூவர் வன்புணர்ந்துள்ள சம்பவம் ஒன்று பூகொடை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது,

குழந்தையை அபகரித்த அந்த இளைஞர்கள், குழந்தையைத் தாக்கப்போவதாக அச்சுறுத்தி தாயை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பூகொடை பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 21 மற்றும் 23 வயதுடைய இளைஞர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குழந்தையின் தாய் வைத்தியசாலையில் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.



தலைமறைவாக உள்ள மற்றுமொரு சந்தேக நபர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் மீட்பு



■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள் வியாழக்கிழமை (25) மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், கடற்படை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் அவர்கள் இணைந்து, யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள கடை ஒன்றில் தடை செய்யப்பட்ட 140 கிலோ கிராம் எடையுள்ள வலையை கைப்பற்றியதுடன், கடையின் உரிமையாளரையும் கைது செய்துள்ளனர்.

இது தொடர்புடைய மேலதிக விசாரணைகளை கடற்றொழில் பரிசோதகர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

# மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிராக போராட்டம்

■ பேரின்பராஜா சபேஷ்

மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியினரால் மட்டக்களப்பு-கல்லடி பாலத்தின் அருகாமையில் தீப்பந்தம் ஏந்தி கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுளளது.

குறித்த கவனயீர்ப்பு போராட்டம், ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு அமைப்பாளர் தர்மரெட்ணம் தயானத்தன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுளளது.

போராட்டக்காரர்கள் தீப்பந்தங்களை ஏந்தியவாறு, “மின்கட்டண அதிகரிப்பை ஏற்படுத்தி ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே, மின் கட்டணத்தை கூட்டாதே, ரணில் மற்றும் ராஜபக்ஷவை கண்டிக்கின்றோம்” போன்ற கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



# திருடிய பணத்தில் ஐஸ்; இருவர் கைது

■ 06) ஏ.எம்.கீத்

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சேமக்காலை வீதியில் காலை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு சக்கர வாகனத்தில் இருந்து 20,000 ரூபாய் பணத்தைத் திருடிய இருவர், அதனைக்கொண்டு ஐஸ் போதைப்பொருளைக் கொள்வனவு செய்து, குடிக்கும் தருவாயில் வியாழக்கிழமை (26) கைது செய்யப்பட்டதாக துறைமுகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களிடமிருந்து 210 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன், திருடிய பணத்தில் 15,000 ரூபாய் மீட்கப்பட்டதாகவும் துறைமுகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை கிறீன் வீதியைச் சேர்ந்த 25,26 வயதுடையவர்கள் எனவும் இவர்கள் தொடர் கொள்ளைச்



சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் போதைப்பொருள் கப்பம் பெறுபவர்கள் எனவும் இவர்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றங்களில் நடைபெறுவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருளுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை துறைமுகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# “சகல பிரிவுகளையும் கணக்காய்வு செய்க”

கம்பஹா மாநகர சபையின் அனைத்து பிரிவுகளையும் கணக்காய்வு செய்து இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கம்பஹா மாநகர ஆணையாளருக்குப் பணிப்புரையொன்று விடுத்துள்ளார்.

கம்பஹா மாநகர சபையில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் கம்பஹா மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடலொன்று புதன்கிழமை (25) இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு பணித்துள்ளார்.

மேலும், மாநகரசபைக்குச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வரும் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளதுடன், அதற்கு அதிகாரிகளின் பலவீனங்களே பிரதான காரணம் என தெரிவித்த அவர், அவ்வாறான அதிகாரிகளை நீக்கிவிட்டு திறமையான அதிகாரிகளைக் கொண்டு பணிகளைத் தொடர தயார் எனவும் கூறியுள்ளார்.



# வீட்டை உடைத்து கொள்ளை

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் வீட்டை உடைத்து பெறுமதியான இரு கையடக்க தொலைபேசிகள் திருடப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீடொன்றில் ஆட்கள் இல்லாதபோது, வீட்டின் கதவினை உடைத்து உள்நுழைந்த கொள்ளையர்கள், வீட்டில் இருந்த பெறுமதியான இரு கையடக்க தொலைபேசிகளை திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# துறைகள் அனைத்திலும் டிஜிட்டல் மாற்றம் காலத்தின் கட்டாயம்

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கியதன் பின்னர், பல்வேறான சட்டங்களை அதிரடியாக அமுல்படுத்துவதில் அரசாங்கம் மிகத்தீவிரமாக இறங்கியுள்ளது. நாட்டில் மலிந்து கிடக்கும் ஊழல், மோசடிகளை முற்றாக இல்லாதொழிப்பதற்கான வேலைத்திட்டத்தை முன்வைக்குமாறு வலியுறுத்தப்பட்டது.

இதனையடுத்தே அரசாங்கம் தீவிரம் காட்டி வருகின்றது.

எங்குப் பார்த்தாலும் ஏதோவொரு வகையில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. சாதாரணமாக பேருந்தில் பயணிக்கும் ஒருவருக்கு வழங்கப்படவேண்டிய மிகுதிப் பணம், முறையாகக் கிடைப்பதே இல்லை. பேருந்து கட்டணங்கள் ஒன்றை எண்ணாக இருந்தால், நடத்துநருக்கே இலாபமாகும். எனினும், வயது முதிர்ந்தவர்கள் சில்லறைகளைக் கொடுத்து, மிகுதியைச் சரியாகப் பெற்றுக்கொள்வார்கள்.

நமது நாட்டில் இடம்பெறும் மோசடிகளை விவரிக்கவே முடியாது.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகளில் இருந்த 700 இலட்சம் ரூபாய் பெறுமதியான நெல் கையிருப்பு காணாமல் போன சம்பவம் தொடர்பில் 04 களஞ்சியசாலைகளின் காப்பாளர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான பழைய காகிதாகிகள் காணாமல் போயுள்ளன.

இவற்றையெல்லாம் தனியொருவனால் செய்யமுடியாது. எப்படியோ கூட்டு களவானிகள் இருக்கத்தான் செய்வார்கள் அவர்களுக்கும் தண்டனையைப் பெற்றுத்தரும் வகையில் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இல்லையேல், இவ்வாறான சுரண்டல்கள் இடம்பெற்றுக்கொண்டே இருக்கும்.

இதற்கிடையே நாடளாவிய ரீதியில் இயங்கும் 341 உள்ளூராட்சி நிறுவனங்களிலும் கட்டணம் செலுத்தும் நடவடிக்கை ஒன்லைன் முறையில் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அது சிறந்த தீர்மானமாகும். உலகமே ஒரு விரலுக்குள் சுருங்கி இருக்கும் நிலையில், நமது நாட்டில் ஒன்லைன் முறைமையை விரிவுப்படுத்துவது அவசியமாகும்.

இதேவேளை, கொழும்பில் நடைபெற்ற தேசிய தகவல் தொழில்நுட்ப விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உலகின் போட்டிப் பொருளாதாரத்துடன், முன்னோக்கிச் செல்வதற்கு இலங்கையைத் தயார்படுத்தும் வகையில் டிஜிட்டல் பொருளாதார மாற்றம் துரிதப்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பான திட்டத்தை 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரையில் நாட்டிற்கு முன்வைப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான சட்டங்களைக் கொண்டு வர எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும், அவை மிகவேகமாக துரிதப்படுத்தப்படவேண்டும் காலதாமம் ஏற்படுமாயின் இருப்பதையும் ஒருபோதும் காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலைமையே ஏற்படும்.

நமது நாட்டை பொறுத்தவரையில் ஊழல், மோசடிகளை முற்றாக இல்லாதொழிக்க வேண்டுமாயின் சகலருக்கும் சமமானதாக சட்டம் அமுல்படுத்தப்படவேண்டும். இல்லையேல் எடுக்கும் முயற்சிகளில் எவ்விதமான பலன்களும் கிடைக்காது என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பொய்மையாளர்களின் வாழ்க்கை, புரட்டி வீசப்பட்டுவிடும். அற்பமான காரியங்களைக் கூச்சமே இல்லாமல் செய்பவர்களுக்கு தங்களின் எதிர்காலம் குறித்து கிஞ்சித்தும் நினைப்பதில்லை.

சீராக வாழ்பவர்களின் வாழ்க்கை ஒருபோதும் சோர்வடையாது. தங்களின் ஆட்சி மட்டும் நிலையாக இருக்கவேண்டும் என எண்ணும் தலைவர்கள், தாங்கள் நேர்மையுடன் வாழ்பவர்கள் எனப் பிரசாரம் செய்வார்கள். இவர்கள், நீதி பற்றிய எண்ணங்களைக் கழுவித்துடைத்து விடுகின்றனர்.

நீதியின் வெப்பம் பற்றி அறியாமல் இருப்பதுவே கெட்டவர்களின் குணமாகும். ஆட்டம் போடும் அரசுகள், எதிர்காலத்தில் தமது ஆயுள் குறுகியது எனத் தெரியாமல் இருப்பது அதிசயம்.

பூமியைக் கடவுள் இரட்சிக்கின்றார் எனச் சொல்லும் உலகம், தவறு செய்த எவரையும் காக்கும் கடவுள் தண்டிக்காமல் விடுவதுமில்லை என்பதை உணர்வதில்லை. இதையே அனைத்து மதங்களும் வலியுறுத்துகின்றன.

உலகையே ஆளப்பிரியப்படும் மாந்தர்கள், நீதி என்பது என்ன என உணரவேண்டும். எதையும் புரிந்து கொள்ளாமல் புத்திமதி கூறுவது நகைப்புக்குரியது.

வாழ்க்கையில் தோல்வியுற்றால், அதற்காகத் தீயவழியில், மாற்று வழிகளைச் செய்யக்கூடாது. அந்த எண்ணங்கள் ஆபத்தானவை. தனியொரு மனிதன் செய்த தவறுகளால், பலர் துன்பப்படலாகாது. பழி வாங்க எண்ணுவது இழிவு.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் 24:

# பண்டாரநாயக்கவின் அரசியல்: காலங்கடந்த ஞானம்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சிங்களம் மட்டுமே என்பதே 1956இல் தேர்தலின் முக்கிய கோசமானது என்பது பற்றிக் கடந்த கட்டுரையில் நோக்கினோம். இலங்கைத் தேசிய அரசியலின் வங்குரோத்து நிலை நாட்டின் பொருளாதாரம் சார், அபிவிருத்தி சார் அரசியல் கொள்கைகளை முன்னிறுத்துவதற்குப் பதிலாக இனவாதத்தை முன்னிறுத்தியது. இது தற்செயலானது அல்ல. உலகெங்கும் மக்கள் நலன் சார்ந்த நோக்கற்ற உயர்குடி அரசியலின் நெருக்கடிகள் தவிர்க்கவியலாமல் இனவாதத்தையும் தேசியவாதத்தையும் முன்வைத்த அரசியலை நடத்தவைத்தது. ஐக்கிய தேசியக் கட்சி சிங்களம் மட்டுமே என்ற கொள்கையை முன்வைத்துப் பிரசாரத்தை முன்னெடுப்பதை மேவுகிற விதமாக, ஆட்சிக்கு வந்து 24 மணி நேரத்தில் சிங்களமே நாட்டின் அரசகரும மொழியாக்கப்படும் என்று பண்டாரநாயக்க தனது பிரசாரத்தை முன்னெடுத்தார்.

சிங்களம் மட்டுமே என்ற பிரசாரம் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களிடையே தமிழ்த் தேசியவாதத்தின் எழுச்சிக்கு முக்கியமான காரணமானது. தென்னிலங்கையில் அதுவே பிரதான தேர்தல் கோரிக்கையாக இல்லாத போதும் அதற்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் சிங்கள முதலாளி வர்க்கம் கடைப்பிடித்து வந்த பேரினவாத நடைமுறையைப் பாராளுமன்றத் தேர்தல் மூலமாக மேலும் வளர்த்தெடுக்க வழி செய்தது.

பண்டாரநாயக்காவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஃபிலிப் குணவர்தனவின் ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சியுடனும் பல்வேறு சிங்களப் பேரினவாதக் கட்சிகளுடனும் கூட்டமைத்து மக்கள் ஐக்கிய முன்னணி என்ற கூட்டணியை உருவாக்கியதும் அதன் வேலைத் திட்டத்தில் சிங்களம் மட்டுமே என்பதை விட பண்டாரநாயக்க பிரகடனப்படுத்திய ஐம் பெருஞ் சக்திகளாக விவசாயிகள், தொழிலாளர், புத்த பிக்குக்கள், சிங்கள ஆசிரியர்கள், சிங்கள நாட்டு வைத்தியர்கள், இருந்தாலும், தேசிய முதலாளிய நோக்கங்களே முக்கியமானவையாக இருந்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிங்களம் மட்டுமே கொள்கையை அறிவித்ததையடுத்து, அதிலிருந்த தமிழ்ப் பிரமுகர்கள் விலகினர். எனவே, ஒரு விதத்தில் இரண்டு சிங்களப் பேரினவாத அணிகட்கு இடையிலான மோதலாகவே 1956ஆம் ஆண்டு தேர்தல் அமைந்தது. இது சிறுபான்மையினரைப் புறமொதுக்கிய இலங்கையின் தேர்தல் அரசியலின் தொடக்கப்புள்ளியானது.

1956 தேர்தலில் போட்டியிட்ட 76 தொகுதிகளில் 8இல் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சி வென்றது. பண்டாரநாயக்காவின் மக்கள் ஐக்கிய முன்னணி போட்டியிட்ட 60 தொகுதிகளில் 51இலும் சமசமாஜ கட்சி 21இல் 14இலும் கம்யூனிஸ்ட் கட்சி 9இல் 3இலும் வென்றன. தமிழரசுக்கட்சி போட்டியிட்ட 14 தொகுதிகளில் 10இல் வென்றது. ஜீ.ஜீ.பொன்னம்பலம் மட்டுமே தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வென்றார். பருத்தித்துறைத் தொகுதியில் தோழர் பொன்.கந்தையா கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பெற்ற வெற்றி வடக்கின் முதலாவது இடதுசாரிப் பாராளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்த வரலாறாகும். அதுவே இறுதியானதுமானதன் காரணங்களில் இனவாதத்தின் எழுச்சி முக்கியமானது.

1956ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றாலும் பண்டாரநாயக்காவால் தான் விரும்பிய விதமாக அமைச்சரவையை அமைக்க முடியவில்லை. அப்போது இலங்கையின் வரன்முறையான ஆட்சித் தலைவராகப் பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தும் அவரது பிரதிநிதியாக இலங்கையின் ஆளுநர் நாயகம் (தேசாதிபதி) ஒலிவர் குணதிலகவும் இருந்தனர். இதனால் பண்டாரநாயக்காலவினால் தனது சுயவிருப்பின் அடிப்படையில் அமைச்சர்களை நியமி;க்க முடியவில்லை. இது இலங்கையின் ஜனநாயகத்தின் மட்டுப்பாடுகளைச் சுட்டிநின்றது.

பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் சில முக்கிய தேசிய நல நோக்கிலான செயற்பாடுகள் நடைபெற்றன. அந்நியக் கம்பனிகளின் ஆதிக்கத்தின் கீழிருந்த கொழும்புத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டது. சில தனியார் கம்பனிகளின் ஆதிகத்தின் கீழிருந்த பஸ் சேவை தேசியமயமாக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது. திருகோணமலையிலிருந்த கடற்படைத் தளமும் கட்டுநாயக்கவிலிருந்த விமானப்படைத் தளமும் பிரித்தானியரிடமிருந்து மீளப் பெறப்பட்டுத் தேசவுடமையாயின.

பிரித்தானியர் ஆட்சியின் கீழும் அடுத்து வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழும் இருந்து வந்த தொழிலாளர் விரோதச் சட்டங்கள் நெகிழ்த்தப்பட்டன. தொழிலாளருக்கு வேலை நிறுத்த உரிமை வழங்கப்பட்டது. மே தினம் பொது விடுமுறையாக்கப்பட்டது. ஏழு தொழிலாளர்களுடனேயே தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை வழங்கப்பட்டது. இதனால் பல தொழிற் சங்கங்களை நிறுவத் தொழிலாளர் முன்வந்தனர்.

நெற்காணிச்சட்டத் நடைமுறைப்படுத்தப்பட்டது. நெற்காணித் தனியுடைமைக்குச் சில சட்ட வரையறைகள் கொண்டுவரப்பட்டன. எனினும் பெருங்காணிகளைச் சொந்தமாகக் கொண்ட பௌத்த கோவில்கள் அச் சட்டங்களாற் பாதிக்கப்பட்டதன் காரணமாக அவற்றுக்குச் சில வரிச் சலுகைகள் பின்னர் வழங்கப்பட வேண்டியதாயிற்று. இது அரசியலில் பௌத்த மதத்தின் செல்வாக்கைக் கோடி காட்டியது.

இங்கு விளங்கிக் கொள்ள வேண்டியது யாதெனில், பண்டாரநாயக்கவின் ஆட்சி சோஷலிச ஆட்சியுமல்ல, மக்கள் உணர்ச்சி வேகத்துடன் கொண்டாடியவாறான 'அப்பே ஆண்டுவ'வும் (எங்கள் அரசாங்கம்) அல்ல. பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தமை எவ்வகையிலும் ஒரு புரட்சியுமல்ல.

பண்டாரநாயக்க அதிகாரத்திற்கு வருவதற்குத் தன்னுடன் இணைத்துக் கொண்ட சிங்களப் பேரினவாத அமைப்புக்களில் எக்சத் பிக்கு பெரமுன (ஐக்கிய பிக்கு முன்னணி), கே.எம்.பி. ராஜரத்னவின் ஜாதிக விமுக்தி பெரமுன (தேசிய விடுதலை முன்னணி) போன்றவை முக்கியமானவை. பண்டாரநாயக்க அரசாங்கத்தில் அவற்றின் அழுத்தம் வலுவாக இருந்தது. எனவே 'சிங்களம் மட்டுமே' கொள்கை அடிப்படையில் அரச கரும மொழிச் சட்டத்தை நிறைவேற்ற பண்டாரநாயக்க தயங்க இடமில்லாததோடு தமிழ் பேசுவோரின் மொழி உரிமைகளை உறுதிப்படுத்தும் பகுதிகளை அச்சட்டத்தில் உள்ளடக்கவும் இல்லாமற் போயிற்று.

பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டுமே சட்டம் விவாதத்திற்கு எடுக்கப்பட்டபோது தமிழரசுக் கட்சியினரை விடத் திறமையாகவும் உறுதியுடனும் கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதை எதிர்த்து வாதிட்டனர். வடக்கு, கிழக்கின் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் மேற்கூறிய இடதுசாரி உறுப்பினர்களும் எதிர்த்து வாக்களித்தனர். மற்றோர் தத்தமது கட்சிகளுடன் சேர்ந்து ஆதரித்தனர். இலங்கை 'ட்ரொட்ஸ்கியின் தந்தை' என அறியப்பட்ட பிலிப் குணவர்தன சிங்களம் மட்டுமே சட்டத்தை ஆதரித்தது மட்டுமன்றித் தமிழர் மீது சிங்களம் திணிக்கப்பட வேண்டும் என்ற தொனியிற் பேசித் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கடுமையாக முரண்பட்டார். இந்த சட்டத்தின் உடனடி விளைவுகளாக இரண்டு விடயங்களை நினைவு கூரல் தகும்.

முதலாவது, தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அரச கரும மொழிச் சட்டத்தை எதிர்த்துக் காலிமுகத்திடலில் நடத்திய அமைதியான போராட்டம் ஏவி விடப்பட்ட குண்டர்களால் கலைக்கப்பட்டது. இது தமிழரின் அமைதி வழிப் போராட்டத்திற்கு வன்முறை மூலம் சிங்களத் தேசியவாதம் பதிலளித்த முதலாவது நிகழ்வாகும்.

இரண்டாவது, சிங்களம் மட்டுமே சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னணியில் அம்பாறையில் தமிழர் விரோத வன்முறை நிகழ்ந்தது. அது நாடளாவிய வன்முறையாக விரிவடையாத போதும் எதிர்காலம் பற்றிய ஒரு எச்சரிக்கையாக அமைந்தது.

சிங்களம் மட்டுமே சட்டம் நடைமுறைக்கு வந்த குறுகிய காலத்திலேயே, மொழிப் பிரச்சினை மிகவும் ஆபத்தமான திசையில் போவதை பண்டாரநாயக்க உணர்ந்தார். அதைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கான முயற்சியில் இறங்கினார். தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்கவியலாத மிகுந்த சிக்கலான ஒரு பகை முரண்பாடாக்கி மோசமாக்கியதில் சிங்களம் மட்டுமே சட்டத்தின் பங்கு பெரிது. அதைத் தவறாகக் கையாண்டதன் விளைவுகளை நாடு இரண்டே ஆண்டுகளிற் காணும் என யாரும் எதிர்பார்த்து இருக்கவில்லை.

பண்டாரநாயக்க தமிழரசுக் கட்சித் தலைவர்களைத் தன்னுடன் பேசுவதற்கு அழைத்து ஒரு உடன் படிக்கையைத் தயாரித்தார். அது பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கை எனவும் சுருக்கமாக 'பண்டா- செல்வா உடன்படிக்கை' எனவும் அறியப்பட்டது. அது தமிழரசுக் கட்சி முன்வைத்த நான்கு கோரிக்கைகளான தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமமான தகுதி, தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துதல், தமிழரின் பாரம்பரிய பிரதேசமான வட, கிழக்கு மாகாணங்களுக்கான சமஷ்டி ஆட்சி, மலையக (இந்திய வம்சாவளி தமிழருக்குப் பூரண வாக்குரிமை ஆகியவற்றின் அடிப்படையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகட்குச் சமரசமான ஒரு தீர்வென்று கூறலாம்.

இந்த உடன்டிக்கை கம்யூனிஸ்ட் கட்சி நிபந்தனையின்றி ஆதரித்தது. சமசமாஜக் கட்சியும் அதை வரவேற்றது.

என்னும் அதற்கெதிராக பண்டாரநாயக்காவின் கூட்டணிக்குள்ளும் யூ.என்.பிக்குள்ளும் இருந்து தீயநோக்கங் கொண்ட எதிர்ப்புக்கள் கிளம்பின. தான் வளர்த்த நாய் தன்னையே கடிக்கும் என்பதைக் காலங்கடந்தே பண்டாரநாயக்க உணர்ந்து கொண்டார்.

## கடிதங்கள்

### எட்டாக் கனியான சமுர்த்தி நிவாரணம்

மஸ்கெலியா பிரதேச சபையின் கீழ் இயங்கும் சாமிமலை கவரவில 320/C கிராம சேவகர் பிரிவில் உள்ள ஆறு தோட்டங்களை சேர்ந்த மக்கள் சமுர்த்தி நிவாரணத்தை பெற்றுக் கொள்வதில் புறக்கணிக்கபட்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரிவில் கவரவில, பாக்றோ, சின்ன சோளங்கந்த,. பெரிய சோளங்கந்த, மல்லியப்பு, டீசைட் ஆகிய தோட்ட மக்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

தமக்கான சமுர்த்தி நிவாரணம் சம்பந்தமாக உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதும், இதுவரை தமக்கான உரிய தீர்வு கிடைக்கவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரசாங்கம் என்ன தான் நடைமுறைபடுத்தினாலும் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சமுர்த்தி வங்கி மற்றும் உத்தியோகத்தர்கள் அதேபோல் நோர்வூட் சமுர்த்தி வங்கி மற்றும் அங்கு உள்ள உத்தியோகத்தர்கள் சமுர்த்தி நிவாரணம் வழங்குதல் பணியில் பாகுபாடு காட்டுகின்றனர் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், சமுர்த்தி அதிகாரிகளின் தரகர்களாக செயல்படுபவர்களின் சிபாரிசுகளுக்கு அமையவே குறித்த நிவாரணம் வழங்கப்படுவதாகவும் செல்வந்தர்கள் மற்றும் தரகர்களின் உறவினர்கள் ஆகியோருக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படுவதாகவும் வறிய குடும்பங்களை சேர்ந்த மக்களுக்கு எட்டாக் கனியாக உள்ளதாகவும் இது குறித்து பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனம் செலுத்த முன் வரவேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

செ.தி.பெருமாள்

வடக்கு கிழக்கிலும் றிட்ஸ்பரி சேர் ஜோன் டாபர்ட்

# மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகள்



வடக்கு கிழக்குக்கான ரிட்ஸ்பரி சேர் ஜோன் டாபர்ட் கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகள் அண்மையில் யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நிறைவடைந்தன. இலங்கையின் இளைஞர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், வலுவூட்டல், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை பரப்புவதாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

பெண்கள் பிரிவில் ஒட்டுமொத்த சம்பியன்ஷிப் பட்டத்தை 81 புள்ளிகளுடன் தெஹியத்தகண்டிய தேசிய பாடசாலை அணி பெற்றுக் கொண்டது. வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயம் 47 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும், வேம்படி மகளிர் உயர் கல்லூரி 45 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. ஆண்கள் பிரிவில், 77.5 புள்ளிகளுடன் பளை மத்திய கல்லூரி சம்பியன் பட்டத்தையும், புனித. சேவியர் ஆண்கள் கல்லூரி 75 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தையும், மானிப்பாய் இந்துக் கல்லூரி 52 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தியிருந்த ஆண்டின் சிறந்த பெண் மெய்வல்லுநருக்கான விருது சிவப்பிரகாச மகளிர் கல்லூரியின் வி.தெனிஷாவுக்கு வழங்கப்பட்டது. இவர் நீளம் பாய்தலில் 4.83m எனும் இலக்கை எய்தியிருந்தார். அதுபோன்று, ஆண்கள் பிரிவில் ஆண்டின் சிறந்த மெய்வல்லுநருக்கான விருது வங்காலை புனித அன்னம்மாள் கல்லூரியின் ஏ.ரொமெக்சன் லம்பேர்ட்டுக்கு வழங்கப்பட்டது. இவர் நீளம் பாய்தலில் 5.66m எனும் உயர் புள்ளிகளை பதிவு செய்திருந்தார். வடக்கு கிழக்கைச் சேர்ந்த 1000க்கும் அதிகமான மெய்வல்லுநர்கள் இந்த ஆண்டின் போட்டிகளில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் (CBL) நிறுவனத்தின் இலங்கையின் அபிமானம் வென்ற சொக்லட் வர்த்தக நாமமான ரிட்ஸ்பரி, இளம் மெய்வல்லுநர்களை ஊக்குவித்து கட்டியெழுப்புவதில் தன்னை அர்ப்பணித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் சம்பியன்ஷிப் போட்டிகளை ஏற்பாடு செய்யும் நடவடிக்கையை ரிட்ஸ்பரி மேற்கொண்டதுடன், நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களைச் சேர்ந்த இளைஞர்கள் மத்தியில் போட்டிகளுக்கான ஈடுபாடு, ஆர்வம் மற்றும் வாய்ப்பை வழங்கியிருந்தது.

சிபிஎல் ஃபுட்ஸ் இன்டர்நஷனல் பிரைவட் லிமிடெட் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் நிலுபுல் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், “சேர் ஜோன் டாபர்ட் கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகளில் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளிலிருந்து பங்கேற்றிருந்த மாணவர்களின் எண்ணிக்கை ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு குறைவாக காணப்பட்டது. இலங்கையின் விளையாட்டுத் துறையில் உள்ளடக்கத்தை ஊக்குவித்து, இந்த சமத்துவமின்மையை இல்லாமல் செய்யும் வகையில், இளம் வீரர்களை ஊக்குவிப்பதற்கு பிராந்திய மட்டங்களில் செல்வதற்கு நாம் நிர்ப்பந்திக்கப்படுவதை உணர்ந்தோம். இலங்கையின் ஒவ்வொரு பாகத்தையும் சேர்ந்த ஒவ்வொரு மெய்வல்லுநருக்கும் தமது விளையாட்டுத் திறனை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது எமது எதிர்பார்ப்பாகும்.” என்றார்.

மேலும், பங்குபற்றலை ஊக்குவிக்கும் வகையில், வெற்றியாளர்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் போன்றன இறுதிப் போட்டிக்கு முன்னதாக வழங்கப்பட்டன. இது பிராந்திய மட்டங்களில் வழமையாக இடம்பெறாத ஒரு முறைமையாகும். சம்பியன்ஷிப் நிறைவுக்கு வந்ததும், பெருமைக்குரிய 51ஆவது ரிட்ஸ்பரி சேர் ஜோன் டாபர்ட் கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்பை வெற்றியாளர்கள் பெற்றனர். இலங்கையின் பாடசாலை மட்ட விளையாட்டு வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த போட்டி நிகழ்வாக இது அமைந்துள்ளதுடன், அடுத்த தலைமுறை மெய்வல்லுநர்களை ஊக்குவிப்பதற்கான அர்ப்பணிப்பை ரிட்ஸ்பரி கொண்டுள்ளது.

Sunshine Consumer இன்

# ‘Project Delta’அறிமுகம்

Sunshine Consumer Lanka (SCL), சவாலான பெரிய பொருளாதார நிலைமைகளை எதிர்கொண்டு வெற்றிகரமாக முன்னேறுவதற்கான ஒரு மூலோபாய நடவடிக்கையாக ‘Project Delta’ என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த திட்டத்தின் நோக்கம், நிறுவனத்தின் விநியோக வலையமைப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையை மிகவும் திறமையாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுவதும், மாறிவரும் சந்தை நிலைமைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து, கோவிட் தொற்றுநோய்க்குப் பிந்தைய காலத்தில் வாடிக்கையாளர்களின் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்யும் நிறுவனமாக Sunshine Consumer ஐ உருவாக்குவதும் ஆகும்.



இந்நிறுவனம் தனது அனைத்து வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளையும் கையாளும் விதத்தை மாற்றுவதற்கான ஒரு விரிவான முயற்சியாக ‘Project Delta’ ஏப்ரல் 2023இல் ஆரம்பிக்கப்பட்டது. Sunshine Consumer தனது விற்பனை நடவடிக்கைகளில் புரட்சியை ஏற்படுத்துவதற்காக சிரேஷ்ட சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை நிபுணர் நந்தன விக்கிரமகேயின் வழிகாட்டுதலின் கீழ் Project Deltaஇன் முதல் கட்டத்தை ஆரம்பித்தது. அங்கு, தற்போதுள்ள விற்பனை அமைப்பு, விற்பனை அமைப்புகள் மற்றும் விற்பனை பணியாளர்கள் பற்றிய விரிவான மதிப்பீடு செய்யப்பட்டது.

முதல் கட்டத்தில் சேகரிக்கப்பட்ட சிறப்பு அறிவின் அடிப்படையில் இரண்டாம் கட்டத்தில் முன்மொழிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், நிறுவனத்தின் விற்பனை செயல்பாடுகளை மறுவடிவமைப்பதில் ஆர்வம், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வாடிக்கையாளர் கவனம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை முன்மொழிவுகள் வலியுறுத்துகின்றன. மேலும், இரண்டாம் கட்டம் நிறுவனம் அதிநவீன தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதற்கும், மதிப்புமிக்க தகவல்கள் மற்றும் பகுப்பாய்வுகளிலிருந்து பெறப்பட்ட அறிவைப் பயன்படுத்துவதற்கும், மேலும் ஆற்றல்மிக்க வணிகச் சூழலில் வெற்றிபெறத் தேவையான திறன்கள் மற்றும் கருவிகளுடன் அதன் விற்பனைப் பணியாளர்களை வடிவமைப்பதற்கும் வழி வகுக்கிறது.

“Sunshine Consumerஇல் நாங்கள் சவாலான பொருளாதார நிலைமைகளில் முன்னேறும்போது புத்தாக்கம் மற்றும் சூழலுக்கு ஏற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதிபூண்டுள்ளோம். எமது ஒட்டுமொத்த விற்பனை நடவடிக்கையில் மேற்கொள்ளப்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு நந்தன விக்கிரமகே தலைமை தாங்கியதனால், எந்தவொரு வணிகச் சூழலிலும் வெற்றிபெறக்கூடிய வலுவான மற்றும் நெகிழ்ச்சியான விற்பனைப் பணியாளர்களை உருவாக்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்” என Sunshine Consumer நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஷியாம் சதாசிவம் தெரிவித்தார்.

‘Project Delta’வின் கீழ் செயல்படுத்தப்பட்ட மூலோபாய நடவடிக்கைகள் ஏற்கனவே Sunshine Consumerக்கு விதிவிலக்கான வளர்ச்சி மற்றும் செயல்திறனைக் காட்டியுள்ளன. இதன்படி, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், நுகர்வோர் பிரிவின் வருமானம் 21% கணிசமான அளவு அதிகரித்து 2024 முதல் காலாண்டில் 4.7 பில்லியன் ரூபாவைப் பதிவுசெய்ததுடன், குழுமத்தின் வருமானத்தில் 35% பங்களிப்பை அதற்கமைய காலப்பகுதியில் வழங்கியுள்ளது. இலங்கையின் முன்னணி வர்த்தக நாமங்களான Zesta, Watawala, Ran Kahata மற்றும் Daintee ஆகியவற்றுடன் நுகர்வோர் பிரிவில் நிறுவனம் வலுவான செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளது.





# எண்ணம் எனும் வானிலே

முன்னமே புரிந்து கொள்ளப்பட்ட
ஒரு சொல்லினை போல்
என்னை அணுகுவதை எப்போது
கைவிடப்போகிறாய் அன்ப நீ?
நமக்கு முன்னே
நிலா ஒளிர்கிறது.
அமைதியான தண்ணொளியில்
ஓடமென மிதக்கிறது இரவு.
கரைசேரும் காலமும்
கைசேரும் கணமுமென
உன் கற்பனையில்
பழைய கள்ளின் வாசம் அதீதமாகிறது
நான் களி கொள்ளவில்லை
உன் ஆதிக்க கணங்களில்.
இந்த நிலாவின் கொடுமையில்
இருளை பறிகொடுத்த
ஆந்தையை போலிருக்கிறது
எனது கணங்கள்.
நிலவை தளர்த்தி
இருளோடு எனை பிணை.
சற்றேனும் கருணையற்று
நிலவினை அணுகு
ஒரு நீதிமானென
சட்டென்று ஒளிர்வேன்
உன் வனத்தில்
அடர்பச்சை கனத்தில்.

-லலித்தா -





# உணர்வின் அலை



நான்காம் அறிவில் நீ...
மனதுக்கான நியாயப்பபடுத்தலை
இப்போது விட்டுவிட்டு
ஓர் உணர்தலையும்
ஏற்றுக்கொள்ளளையும்
சார்ந்திருக்கிறது மௌனம்.

ஆறு அறிவும் வரும்
ஓர் நாளில்
அனல் கொதிக்கும்
சூட்டில் என்னைப் போல்
இரவியைத் தேடாதே.

நிலவு கூட சுடும்.
இரவில் கூட இரவி இறங்கி
வந்து உன்னை
அணைத்துக்கொள்ளும்.

தகிக்க.. தண்ணீர் கொண்டு வர
திராணியற்று தளரும் கால்களை
வென்றுவிடும் இதே குழந்தை
மனம்.

-வசுமதி நிர்மல்-



# மனங்களின் காலப்பயணம்

மனங்களின் காலப்பயணத்தில்
இனம்புரியாத தேடல் -சில
கணங்களில் எண்ணங்களை
கண்டுவந்த தாகம்...

மறந்துவிட்ட துன்பங்கள்!
இழந்துவிட்ட இன்பங்கள்!
தவறவிட்ட சந்தர்ப்பங்கள்!
நழுவவிட்ட அர்ப்பணிப்புகள்!

கடிகார முள்ளை
கடிந்தென்ன பயன்
கானலாய் போனவைகள்
கனவாகவே மறையட்டும்....

மூளைக்கலங்கள் தேடுவதை
முற்றாக தந்துவிட முடியாது
மூழ்கியெடுத்த முத்துக்களாக - சில
மன எண்ணங்கள் மீளட்டும்.....

-கனக தீபகாந்தன் -





# மீளா துயர்

சோகங்கள் மட்டுமே
சொந்தமாகிறது...
துன்பங்கள் மட்டுமே துணை
நிற்கிறது...
விழிநீர் மட்டுமே விதியாகி
போகிறது...
வலிகள் மட்டுமே வாழ்வாக
மாறியது...
இழந்தவை போதுமென்று
இறைவனிடம் கெஞ்சினாலும்...
இழப்புக்கள் தொடரத்தான்
செய்கிறது...

ஏதாவதொரு இடத்தில்
முற்றுப்புள்ளியிடலாமென
நினைத்தபோதும்...
முடிவற்ற வானம் போன்றே
நீண்டிடவே செய்கிறது...

இம்சிப்பவன் எதிரியாக இருந்தால்
எதிர்த்து வென்றுவிடலாம்...
இறைவனே இம்சிக்கும் பொழுது
எவ்வழியில் மீள்வது...

றொசில்டா அன்டன்



அமெரிக்கா

# பறவைகளாக மாறிய டிரோன்கள்

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் மன்ஹாட்டன் பகுதியில் 843 ஏக்கர் நிலப்பரப்பில் சென்ட்ரல் பார்க் (Central Park) உள்ளது. இது நியூயோர்க் நகரின் ஐந்தாவது மிக பெரிய பூங்காவாகும். இங்குள்ள ஏரிக்கு அருகே ட்ரிஃப்ட் (DRIFT) எனும் டச்சு ஸ்டூடியோ ஒன்றினால் "பிரான்சைஸ் ஃப்ரீடம்" (Franchise Freedom) எனும் பெயரில் ஒரு நிகழ்வு நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், இரவு வானில் 1000 டிரோன்கள் ஒரே நேரத்தில், பல கலை வடிவங்களை காண்பிக்கும்படி பறக்க விடப்பட்டன.

இது குறித்து ட்ரிஃப்ட் அமைப்பு தங்கள் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தில், "மனிதன், இயற்கை மற்றும் தொழில்நுட்பம் ஆகிய மூன்றிற்கும் இடையே உள்ள தொடர்பை ஆய்வு செய்யும் ஒரு முயற்சி இது. கவித்துவமான இந்த நிகழ்வு, மனிதர்களாக நாம் ஒரே சமூகமாகச் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதை உணர்த்துகிறது" என தெரிவித்துள்ளது.



அமெரிக்கா

## "மக்கள் பின்னால் ஒளிந்துகொண்ட கோழைகள்"

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு கடந்த 7ஆம் திகதி திடீரென தாக்குதல் நடத்தினர். அத்துடன், பலர் பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர். இதற்கு இஸ்ரேல் காசா மீது ஏவுகணைகளை வீசி பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் இரு பக்கமும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், "ஹமாஸ் அமைப்பு பாலஸ்தீன மக்களுக்குப் பின்னால் சென்று ஒளிந்துகொண்ட கோழைகள்" என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடுமையாக சாடியுள்ளார்.



மேலும் காசா மக்களுக்கு உணவு உள்ளிட்ட பிற தேவையான பொருட்களை வழங்கும் அமெரிக்காவின் முயற்சிக்கு ஆதரவளித்து வரும் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன மக்களுக்கு நன்றி எனவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

## சபாநாயகரானார் மைக் ஜோன்சன்



அமெரிக்கப் பாராளுமன்ற பிரதிநிதி சபையில் ஜனநாயக கட்சியை விட குடியரசு கட்சிக்கு அதிக பலம் உள்ளது. இதனால் குடியரசு கட்சியைச் சேர்ந்த கெவின் மெக்கார்த்தி, சபாநாயகராக இருந்தார்.

கெவின் மெக்கார்த்தி, ஆளுங்கட்சியுடன் இணக்கமாக செயல்படுவதாகக் குடியரசு கட்சி உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டு வந்து அவரை பதவி நீக்கம் செய்தனர்.

புதிய சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதில் குடியரசு கட்சியினரிடையே கருத்து வேறுபாடு இருந்து வந்ததால் சபாநாயகர் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதில் குழப்பம் நிலவியது.

இந்நிலையில், புதிய குடியரசு கட்சியின் சபாநாயகர் வேட்பாளராக மைக் ஜோன்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து, சபாநாயகர் தெரிவுக்கான வாக்கெடுப்பில் 220 வாக்குகள் பெற்று மைக் ஜோன்சன், பாராளுமன்ற பிரதிநிதிகள் சபை சபாநாயகராக வெற்றி பெற்றுள்ளார்.



## மீண்டும் விசா சேவை

இந்தியா - கனடா இடையேயான உறவில் கடந்த சில நாட்களாக மோதல் நிலவி வருகிறது. கனடாவில் காலிஸ்தான் தீவிரவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் மாதம் மர்ம நபர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். இந்த கொலைக்குப் பின்னணியில் இந்தியா இருப்பதாகப் பகிரங்கமாகக் குற்றம்சாட்டினார் கனடா பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோ.

மேலும் அந்நாட்டு நாடாளுமன்றத்திலும் இந்தியா மீது குற்றம்சாட்டி பேசினார். ஹர்தீப் சிங் கொலைக்கு பின்னணியில் இந்தியா இருப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார். ஜஸ்டீன் ட்ரூடோவின் இந்த குற்றச்சாட்டுக்களை இந்திய அரசு மறுத்ததோடு கண்டனமும் தெரிவித்தது.

இதையடுத்து கனடாவில் இருந்த இந்தியத் தூதரை வெளியேற்றியது அந்நாட்டு அரசு. இதற்குப் பதிலடியாகக் கனடா தூதர்களை வெளியேற உத்தரவிட்டது மத்திய அரசு மேலும் இந்தியாவில் உள்ள கனடா தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைக்குமாறும் உத்தரவிட்டது.

இந்த மோதல் காரணமாகக் கடந்த மாதம் 21ம் திகதி முதல் இந்தியா கனடாவுக்கான விசா சேவையை நிறுத்தியது. இதனால் கனடாவில் இருந்து இந்தியா வரமுடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் மீண்டும் விசா வழங்கும் சேவையைத் தொடங்க வேண்டும் என்று கனடா அரசு சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டு வந்தநிலையில், தற்போது இந்தியா மருத்துவ விசா, பிஸ்னஸ் விசா, என்ட்ரி விசா, கான்பரன்ஸ் விசா ஆகிய 4 விசா சேவைகள் தொடங்கியது.

கேரளா

## இளைஞனின் உயிரை பறித்த ஷவர்மா



கேரளா மாநிலம், கோட்டயம் மாவட்டம் தீக்கோயி பகுதியைச் சேர்ந்த ராகுல் என்பவர் மாவேலிபுரம் பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் இருந்து ஷவர்மா ஒன்லைனில் ஓடர் செய்து உட்கொண்டுள்ளார்.

இந்நிலையில், மறுநாள் காலையில் அவருக்கு வயிற்று வலி, வாந்தி ஏற்பட்டு உள்ளது. இதற்காக அங்குள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியபோதும் மீண்டும் உடல் நலக்குறைவு ஏற்பட்டு கொச்சியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தநிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேரள சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## புத்தகங்களில் 'பாரத்' என மாற்ற பரிந்துரை



இந்தியா சமீபத்தில் ஜி20 உச்சி மாநாட்டுக்கு தலைமை வகித்தது. அப்போது அதில் கலந்து கொண்ட வெளிநாட்டு தலைவர்களுக்கு குடியரசுத் தலைவர் அளித்த விருந்தின் அழைப்பிதழில் முதன் முதலாக "குடியரசுத் தலைவர்" என்பதற்கு பதில் "பாரத குடியரசுத் தலைவர்" என அச்சிடப்பட்டது. அதன்பின் அந்த உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் மோடியின் இருக்கையில் "இந்தியா" என்பதற்கு பதில் "பாரத்" என பெயர் பலகை வைக்கப்பட்டது.

இந்நிலையில், பாடசாலை பாடப் புத்தகங்களில் இந்தியாவின் பெயரை பாரத் என மாற்ற கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில் (என்சிஇஆர்டி) உருவாக்கிய உயர்நிலைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

இது குறித்து இக்குழுவின் தலைவர், அரசியல் சாசனத்தின் 1(1)ஆவது பிரிவில் இந்தியாவின் பெயர் பாரத் என்று உள்ளது. பாரத் என்பது பழங்கால பெயர். 7,000 ஆண்டுகள் பழமையான விஷ்ணு புராணம் போன்ற பழங்கால புத்தகங்களில் பாரத் என்ற பெயர் குறிப்பு உள்ளது. கிழக்கு இந்திய கம்பெனி வந்த பின்பும், 1757ஆம் ஆண்டு பிளாஸி போருக்குப் பின்புதான் இந்தியா என்ற பெயர் பயன்படுத்தப்பட்டது. அதனால், அனைத்து வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்களில் இந்தியா என்ற பெயருக்கு பதில் பாரத் என்ற பெயரை பயன்படுத்த வேண்டும் என உயர்நிலைக் குழு ஒருமனதாக பரிந்துரை செய்துள்ளது என தெரிவித்துள்ளார்.




சம்பியன்ஸ் லீகில் ஏ.சி மிலனை பரிஸ் ஸா ஜெர்மைன்

# வீழ்த்தியது

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் வியாழக்கிழமை (26) அதிகாலை நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலன் உடனான போட்டியில் 3–0 என்ற கோல் கணக்கில் பிரெஞ்சு லீக் I கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் வென்றது.

பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாக, கிலியான் மப்பே, றன்டல் கொலோ முலானி, லீ கங்–இன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், ஸ்கொட்லாந்துக் கழகமான செல்டிக்கின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்றிட் 2–2 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியிருந்தது.

இதேவேளை, நெதர்லாந்துக் கழகமான பெர்னூர்ட்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் இன்னொரு இத்தாலிய சீரி ஏ கழகமான லேஸியோ 1–3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்திருந்தது.

## யுனைட்டெட்டுக்குத் திரும்பும் டி கியா?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்னாள் கோல் காப்பாளரான டேவிட் டி கியாவை குறுகிய கால ஒப்பந்தமொன்றில் கழகத்துக்குத் திரும்புமாறு கோருவதற்கு அக்கழகம் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தனது ஒப்பந்த முடிவில் 32 வயதான டி கியா நான்கு மாதங்களுக்கு முன்னர் யுனைட்டெட்டிலிருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

## பாண்டியா இல்லை



சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில் தொடர்ச்சியாக இரண்டாவது போட்டியை இந்தியாவின் சகலதுறைவீரர் ஹர்டிக் பாண்டியா தவறவிடவுள்ளார்.

பங்களாதேஷுக்கெதிரான போட்டியில் கணுக்கால் உபாதைக்குள்ளான நிலையில், அதிலிருந்து குணமடைந்து வருவதன் காரணமாகவே நாளை மறுதினம் (29) நடைபெறவுள்ள இங்கிலாந்துக்கெதிரான போட்டியை பாண்டியா தவறவிடவுள்ளார்.



உலகக் கிண்ணம்:

## நெதர்லாந்தை சுருட்டிய அவுஸ்திரேலியா

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், டெல்லியில் புதன்கிழமை (25) நடைபெற்ற நெதர்லாந்து உடனான போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

ஸ்கோர் விவரம்:


நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 399/8 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: கிளென் மக்ஸ்வெல் 106 (44), டேவிட் வோர்னர் 104 (93), ஸ்டீவன் ஸ்மித் 71 (68), மர்னுஸ் லபுஷைன் 62 (47) ஓட்டங்கள்)

நெதர்லாந்து: 90/10 (21 ஓவ. ) (பந்துவீச்சு: அடம் ஸாம்பா 4/8, மிற்செல் மார்ஷ் 2/19, பற் கமின்ஸ் 1/14, மிற்செல் ஸ்டார்க் 1/22, ஜொஷ் ஹேசில்வூட் 1/27)

போட்டியின் நாயகன்: கிளென் மக்ஸ்வெல்

இந்நிலையில் சென்னையில் இன்று (27) பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பாகிஸ்தானை தென்னாபிரிக்கா எதிர்கொள்ளவுள்ளது.




## ஸ்பெய்ன் செல்லும் கப்ரியல் ஜெஸூஸ்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான ஆர்சனலின் முன்களவீரரான கப்ரியல் ஜெஸூஸில் ஸ்பானிய லா லிகா கழகங்களான றியல் மட்றிட், பார்சிலோனா ஆகியன ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியிலிருந்து கடந்தாண்டு ஆர்சனலுக்கு 26 வயதான ஜெஸூஸ் செல்ல முன்னரும் றியல் மட்றிட்டும், பார்சிலோனா ஆகியன ஜெஸூஸில் ஆர்வம் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 27 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.